DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR), TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.24/2024**
**P.W. 11**

| | | |
|---|---|---|
| Name | : | **திருமதி.பூமணி** |
| Husband's Name | : | **திரு.சுந்தரா நந்தன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

(Accused 1 and 2 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருக்கிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படக்கூடிய வழக்குகளை நான் கணினியில் தட்டச்சு செய்து கணினியில் பதிவேற்றமும் செய்து வருகிறேன். மண்ணச்சநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.*31/2024*, பிரிவுகள் *294(b), 323, 324, 506(ii)* இ.த.ச உ/இ. பிரிவுகள் *3(1)(r), 3(1)(s) and 3(2)(va) SC/ST Act* வழக்கில் ஜீயபுரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் *30.01.2024, 31.01.2024* மற்றும் *26.03.2024* ஆகிய தேதிகளில் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் கொடுத்த வாக்குமூலங்களையும் மற்றும் எதிரிகளை கைது செய்தபோது எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளரிடம் சொல்ல சொல்ல அதை நான் மடிகணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்துக்கொடுத்தேன். வழக்கு தொடர்பாக *26.03.2024* அன்று ஜீயபுரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

Webcopy

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் கடந்த மூன்று வருட காலமாக *CCTNS* மென்பொருள் பதிவேற்றம் செய்து வருகிறேன். இந்த வழக்கு இல்லாமல் வேறு *SC/ST Act*-ன் கீழான வழக்குகளை தட்டச்சு செய்திருக்கிறேன். ஏற்கனவே தட்டச்சு செய்த வேறு *SC/ST Act*-ன் கீழான வழக்குகளில் தட்டச்சு செய்த வாக்குமூலங்களை இந்த வழக்கிற்கு உருமாற்றம் செய்து பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Advocate